[2006 செப்டம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் இருக்கிற கலசப்பாக்கம் கால்நடை மருத்துவமனை, 1967 ஆம் ஆண்டு, அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அப்படிப்பட்ட மருத்துவமனையைக் கால்நடை அறிவியல் ஆராய்ச்சி மையமாகத் தரம் உயர்த்துவதற்கு, இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை என்பது, கால்நடைத் துறையின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஆராய்ச்சி மையம் என்பது கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்மூலம் செயல்பட்டு வருகிறது. ஆனாலும், உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலிக்க இவ்வரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

150—

படகுப் போக்குவரத்து

*** 1480—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் உப்பனாற்றின் முகத்துவாரத்தில் மீன்பிடிப் படகுப் போக்குவரத்து வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் உப்பனாற்றின் முகத்துவாரத்தில் மீன்பிடிப் படகுகள் போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

2006 செப்டம்பர் 2]

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல், உப்பனாற்றின் முகத்துவாரத்தில் மீன்பிடிப் படகுகள் போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக திருமுல்லைவாசல் மீனவ சமுதாய மக்களின் சார்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பகுதியில் சுமார் 30—க்கும் மேற்பட்ட விசைப் படகுகளும், 50—க்கும் மேற்பட்ட சாதாரண படகுகளும் பயன்படுத்துகிறவகையில், நடப்பாண்டிலேயே மழைக் காலத்திற்கு முன்பாக இத்திட்டத்தைச் செய்துகொடுக்க முன்வருவார்களா? இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கிராமப் பகுதியில், ஆண்டுதோறும் இயற்கை மண்மேடு ஏற்படுகிறது; இதனால், மீனவர்கள் தங்களது படகுகளை மீன்பிடித் தொழிலுக்குக் கொண்டுசெல்லவும், அதன்பின், கரைக்குக் கொண்டுவரவும் மிகுந்த சிரமப்படுகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தினைக் கொண்டு திருமுல்லைவாசல் கிராமத்தின், ஆற்று முகத்துவாரத்தின் இருபுறமும் தடுப்புச் சுவர் போன்ற அமைப்பினை ஏற்படுத்தி உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ் அதனை ஏற்படுத்தி, மண்மேடிடும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணத் தீர்மானிக்கப்பட்டு, முதலில் ஆற்று முகத்துவாரத்தில் மாதிரி ஆய்வுகள் மேற்கொள்வதற்காக, நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசால், முதற்கட்டமாக ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உலக வங்கியின் ஆலோசனையுடனும், மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ள, உரிய நிறுவனம் தேர்ந்தெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணிகள் முடிக்கப்பெற்றபின், இவ்வறிக்கையின்

அடிப்படைக்குரிய வடிவமைப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இப்பணிகள் முடிக்கப்பட்டவுடன், திருமுல்லைவாசல் உப்பனாற்றின் முகத்துவாரத்தில் இயற்கையான ஆழம் ஆண்டுதோறும் பராமரித்திட இயலும் என்பதனால் மீனவர்கள், தங்களது படகுகளைக் கடலுக்குக் கொண்டுசெல்ல மிகவும் வசதியாக இருக்கும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல் 5)

1—

கழிவுநீர்க் கால்வாய்

வினா எண் 2442—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சியில் குள்ளேகவுண்டனூர் கிராமத்திற்கும் மற்றும் கோயில் அருகிலும் கழிவுநீர்க் கால்வாய் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கம்பலாபட்டி ஊராட்சி, குள்ளேகவுண்டனூரில் போதிய அளவு கழிவுநீர்க் கால்வாய்கள் ஏற்கெனவே உள்ளன. எனவே, அங்கு மேலும் கழிவுநீர்க் கால்வாய் தேவைப்படவில்லை.

2—

கழிவுநீர்ப் பாதைகள்

வினா எண் 3029—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—